Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/2022

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியன் | Father/Husband Name | : மலைபுலியன் |
| Age | : | Calling | : |
| Date | : 02.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 day of 04.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் இறுதியாக பெருங்குடி காவல் நிலையத்தில் பணிபுரிந்து 2022 ம் வருடம் பணி ஒய்வு பெற்று தற்போது மேலூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 28.10.2019 ம் தேதி கொட்டாம்பட்டி காவல் நிலைய பொறுப்பு அலுவலராக பணியில் இருந்தபோது மேலூர் அரசு மருத்துவனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்க சென்று சிகிச்சையில் இருந்த கண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று மாலை 06.00 மணியளவில் காவல் நிலையம் வந்து புகாரின்தன்மைகேற்ப குற்ற எண் 325/2019 பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இதசன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும்,அன்றைய தினம் காலை 07.00 மணயளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ஆறுமுகம் மற்றும யுவராஜ் முன்னிலையில் பார்வை மகஜர்,

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 8 மற்றும் அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**

அன்றையதினம் எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கொட்டாம்பட்டி அய்யனார் கோவில் அருகே TN 22 BR 7517 INDICA காரை சாட்சிகள் பாலசந்தர் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். **(அந்த அத்தாட்சி அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அந்த வாகனத்தை படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்தில் அனுப்பிவைத்தேன். **(அந்த படிவம் 91 அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

இவ்வழக்கின் சாட்சிகள் கண்ணன், ராஜ்குமார், கோடிஷ்வரன், தங்கமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் அனைவரும் மதுரை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யவில்லை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் ஜான்பால் சுந்தர் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இன்டிகா கார்தான் நான் கைப்பற்றியதாகும். **(அந்த CD உடன் கூடிய புகைப்படங்கள் 3 எண்ணிக்கை சாபெஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 1வது எதிரி மீது 294(b), 324, 506(2) இதசன்கீழும், 2, 3, 4 எதிரிகள் மீது 294(b), 323, 506(2) இதசன்கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரர் கண்ணன் என்னிடம் புகார் மனு கொடுத்தாரா அல்லது புகார் வாக்குமூலமாக கொடுத்தாரா என்றால் புகார் வாக்குமூலம் கொடுத்தார். புகார் வாக்குமூலம் எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் மேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து பெறப்பட்டது. புகாரை பெறுவதற்கு முன்னர் விபத்து பதிவேட்டை பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேட்டில் கண்ணன் என்பவர் 28.10.2019 ம் தேதி இரவு 12.05 மணி சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த விபத்து பதிவேட்டில் கண்ணன் என்பவரை அழைத்து வந்தது 108 என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் விபத்து பதிவேட்டில் கண்ணனை தெரிந்த 3 நபர்கள் இரவு 11.00 மணிக்கு அவரது வீட்டின் முன்னே வைத்து தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) அதேபோல் புகாரானது யாரால் எழுதப்பட்டது என்றால் புகார்தாரர் அருகே இருந்தவர்கள் எழுதினார்கள். அந்த புகாரை எழுதிக்கொடுத்தவர் யார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக புகாரை பெற்று அதில் பெற்றுக்கொண்ட நேரம், பிரிவு, தேதி ஆகியவற்றை குறித்து கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள புகாரில் அவ்வாறு எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். எனவே இவ்வழக்கின் புகாரானது முறையாக என்னால் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் புகாரில் கருப்புசாமி என்பவரிடம் அறிவேன் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த கருப்பு சாமியை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் எங்கள் காவல் நிலையத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சுமார் 1 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் இடத்திலிருந்து மேலூருக்கு

வருவதற்கு எங்கள் காவல் நிலையத்தை கடந்துதான் வரவேண்டும் என்றால் சரியல்ல.

புகாரிலும், எனது விசாரணையிலும் எந்த வார்த்தை கொண்டு எதிரிகள் பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சிகள் சம்பவமானது இரவு 08.30 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் சம்பவம் நடந்த இடமானது எஸ்சி ஹாஸ்டல் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜ் மற்றும் மாதிரி வரைபடத்தில் எஸ்சி ஹாஸ்டல் இருப்பது குறித்து காட்டப்படவில்லை, சொல்லப்படவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ள சுற்றியுள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியாக விசாரித்துள்ள ராஜ்குமார், கோடிஷ்வரன், தங்கமணி ஆகியோர்கள் புகார்தாரர் கண்ணனின் நண்பர் என தெரிந்துகொண்டேனா என்றால் அவர்கள் சம்பவத்தின்போது புகார்தாரருடன் பேசிக்கொண்டிருந்தவர்கள். புகார்தாரரும், மேற்கூறிய நபர்களும் அடிக்கடி அங்கு குடித்து, பிரச்சனை செய்து வருவார்கள் என்று அந்த பகுதியை சேர்ந்த சித்திகணபதி, அனிதா ஆகியோர்கள் புகார் கொடுத்து அதை நான் விசாரித்து, கண்டித்து அனுப்பினேன் என்றால் இல்லை. நான் புகார்தாரரை, அவரது நண்பர்களை பலமுறை கண்டித்து அனுப்பியுள்ளேன், ஆனால் தற்போது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

புகார்வாக்குமூலத்தில் அருகில் உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள் என்று உள்ளதே தவிர, யார் விலக்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலும், எனது விசாரணையிலும் எதிரிகள் ஆயுதம் காட்டி மிரட்டியதாகவும், அதற்கு பயந்து புகார்தாரர்

ஓடியதாக இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் காலம் 10 ல் கார் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளேன், அதை தவிர வேறு ஏதும் ரத்தம்படிந்த மண் போன்றவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்த இடத்தில் தடயங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அத்தாட்சியில் காரானது யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்க அந்த காரானது யாரிடமிருந்து, எங்கு வைத்து கைப்பற்றப்பட்டது என்றால் சிவகுலத்திற்கு அருகே உள்ள அய்யனார் கோவில் அருகே வைத்து காரை கைப்பற்றினேன், எதிரிகளை காரை விட்டுவிட்டு ஓடிவிட்டதனால், காரை யாரிடமிருந்து கைப்பற்றினேன் என்று குறிப்பிடவில்லை. மேற்கூறிய விவரத்தை நான் இதற்கு முன்னர் வேறு எங்காவது தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள படிவம் 91 ல் எந்த சாட்சிகள் முன்னிலையில் காரை கைப்பற்றினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் காயம்பட்ட நபர் மேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்ததாகத்தான் உள்ளது என்றால் சரிதான், 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துவரப்பட்டார். தலையில் காயம் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது தவிர எந்த பகுதியில் காயம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்னதுபோல் நடந்த சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, புகார்தாரரும், அவரது நண்பர்களும் பிரச்சனை செய்வதாக அந்த பகுதியில் சேர்ந்தவர்கள் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துள்ளார். அதில் எதிரி கணேசனும் ஒருவர். அதனால் புகார்தாரருக்கும் அவரது நண்பர்களுக்கும் குடிபோதையில் ஏற்பட்ட பிரச்சனைக்கு எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருந்த புகார்தாரரின் நண்பர்களை மட்டும் விசாரித்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகள் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் காரை கைப்பற்றவில்லை, எதிரிகளின் வீட்டில் வைத்துதான் காரை கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.